செ.வெ.எண் :18/மே நாள்:20.05.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

**ஈழுவா மற்றும் தியா சமுதாய மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சாதிச்சான்றிதழ் வழங்கக் கோரும் முறையீடுகளை ஆராய்வதற்கான குழுவிடம் தொடர்புடைய கோரிக்கைகள்/முறையீடுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

ஈழுவா மற்றும் தியா சமுதாய மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சாதிச்சான்றிதழ் வழங்கக் கோரும் முறையீடுகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கக் கோரி அரசானை (நிலை) எண்-39 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள்:21.04.2020-ல் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராக நியமித்து நான்கு உறுப்பினர்கள் குழு அமைத்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி பொருள் தொடர்பாக குழுவிற்கு கோரிக்கைகள்/முறையீடுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் 26.05.2020-க்குள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலும் அல்லது குழுவின் உறுப்பினர் செயலர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், எழிலகம் விரிவாக்கக் கட்டடம், 2-ம் தளம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு எழுத்துப்பூர்வமாக தபால்/மின்னஞ்சல் (dir-combc@tn.gov.in, dbcwotnrmd@yahoo.in, dbcwo.tnrmd@nic.in) வாட்ஸ் ஆப்-9445477843 மூலமாகவும் அளிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**